(முற்பகல் 10—20)

திரு. எஸ்.ஆர்.இராதா: தலைவரவர்களே, இந்த இரண்டு உதாரணங்கள் போதும் என்று நான் கருதுகிறேன். 'எங்கள் கட்சி உறுப்பினரின் பேச்சு வெளியிடாமல் எதிர்க்கட்சி உறுப்பினரின் பேச்சு மட்டுமே முரசொலி நாளேட்டில் வெயிடப்பட்டிருக்கின்றது. அவர்கள் எல்லாப்பேச்சுகளையும் வெளியிட இடம் இல்லை என்று காரணம் சொல்லலாம். ஆனால் பேரவையின் நடவடிக்கைகளை வெளியிடும் போது குற்றச்சாட்டுக்கள் பற்றி வெளியிடப்படுகிறது. அப்போது அவற்றுக்கான மறுப்புக்களையும் வெளியிட வேண்டும் என்பதுதான் மரபு. இந்த மரபு முரசொலி நாளேட்டில் மீறப்படுகிறது. இதனால் மக்களுக்கு ஒருதலைப்பட்சமாக தகவல்கள் தரப்படுகின்றன. அந்தப் பத்திரிகைகளைப் படிக்கின்றவர்கள் குற்றச்சாட்டுகளை நம்புகின்ற அளவுக்கு நிலைமை உண்டாக்கப்படுகிறது. எனவே இது இந்த ஆட்சியின் மீது வேண்டுமென்றேகளங்கம்கற்பிப்பதற்குஏதுவாக இருக்கின்றது. அவையின் நடவடிக்கைகளைக் கூட்டவோ குறைக்கவோ அல்லது அவற்றில் சிலவற்றை விட்டு விடவோ செய்வது அவையின் உரிமையை மீறிய செயலாகும். எனவே இதனை அவை உரிமை மீறல் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குறித்த என்னுடைய தீர்ப்பை பின்னர் அறிவிக்கிறேன்.

(இ) ஓர் உறுப்பினர் மீது களங்கம் கற்பிக்கும் வகையில் 'அண்ணா' நாளிதழில், செய்தி வெளியிட்டதாக கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.துரைமுருகன், திரு.தி.சு.நல்லதம்பி ஆகியோர் 'அண்ணா' நாளேட்டின் மீது அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை ஒன்றை எழுப்ப அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது இரண்டும் ஒரே பிரச்சினை குறித்து இருப்பதால், திரு. துரைமுருகன் மட்டும் இப்பிரச்சினையை எழுப்புவார்,

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, 30-3-1978-ஆம்நாளிட்ட 'அண்ணா' நாளிதழில் கீழ்க்காணும் தலைப்பில் ஒரு செய்தி வெளியாகி உள்ளது.

''சட்ட மன்றப் பேரவை தி.மு.க. காட்டிய திருட்டுப் பொருள். மாணவர்களுக்கு வழங்கிய தட்டு எம்.எல்.ஏ. கைக்கு வந்தது எப்படி?

1978 ஏப்ரல் 5] [திரு. துரைமுருகன்]

இந்த தலைப்பின் கீழ் செய்தி வெளியாகியிருக்கிறது. பத்திரிகை சுவரொட்டிகளிலும், பெரிய எழுத்துக்களில் வெளியிடப்பட்டிருக்கிறது இவற்றை மேலோட்டமாகப்பார்க்கிற யாருக்கும் என் மீது தவறான எண்ணம்தான் ஏற்படும். மேலும் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. அரங்கநாயகம் பேசும் போது ''இந்த இரண்டு தட்டுக்களும் இப்போது அந்தப் பள்ளியில் இல்லை. தட்டுகள் திருடப்பட்டிக்கின்றன'' என்று கூறியதும் வெளியாகியிருக்கிறது. மாண்புமிகு அவை முன்னவரும் அந்தப் பொருட்பட கூறியதாக செய்தி வெளிவந்திருக்கிறது. இவை அனைத்தும் எனக்குக் களங்கம் கற்பிக்கும் உள்நோக்கத்தோடும், திட்டமிட்டும் வேண்டுமென்றே கூறப்பட்டு வெளியிடப்பட்டவையாகும்.

ஓர் ஆதாரத்தை அவையில் காட்டும்போது அது எப்படி வந்தது என்று யாரும் வற்புறுத்த முடியாது. சட்டப்படி அதற்கு வழியில்லை. அதேபோன்று ''தட்டுகள் திருடப்பட்டன; ஆனால் துரைமுருகன் திருடினார் என்று கூறவில்லை' என்று கூறுவதும் மறைமுகமாக என்னைக் குற்றம் சாட்டுவதாக அமையும். இவையெல்லாம் மாண்புமிகு அமைச்சர்களுக்கும் 'அண்ணா' நாளிதழுக்கும் மிக நன்றாகத் தெரியும். இருந்தும் என்மீது இத்தகைய களங்கத்தை திட்டமிட்டு ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது சட்டமன்றப் பேரவை உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய கடமையைச் செய்ய விடாமல் தடுக்கக்கூடியதாகவும், அவை உரிமையை மீறியதாகவும், அமைந்திருக்கிறது. எனவே இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பிரச்சினை குறித்தும் என் தீர்ப்பு பின்னர் வழங்கப்படும்.

(ஈ) ஓர் உறுப்பினர் கூறாததைக் கூறியதாக மெயில் நாளேடு செய்தி வெளியிட்டதாகக் கூறப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பண்ணை சேதுராம் அவர்கள் 'மெயில்' நாளேட்டின் ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவருக்கு என் அனுமதி அளிக்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 184-ன் கீழ் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை எழுப்ப அனுமதி கோருகிறேன். 1-4-1978-ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் இந்த நகராட்சிகள் திருத்த மசோதா மீது விவாதம் நடைபெற்றது. அப்போது விவாதத்தில் கலந்து கொண்டு நானும் எனது